III ADDITIONAL DISTRICT AND SESSIONS COURT,
THIRUVALLUR AT POONAMALLEE.

EP.No.38/2025

Deposition of witness for CW1
solemnly by Thiru.M.Muthupandi, Junior Assistant,
in accordance with the provision of Act I for 1873 on 09-06-2026

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : நாகூர்கனி | Village | : | |
| Father's / Husband's Name | : வலியுல்லா | Calling | : | |
| Age | : | Taluk | : | |

**நீதிமன்ற விசாரணை**

நான் பூந்தமல்லி 2 வது கூடுதல் மாவட்டத்தோடு இணைந்த நாசர் பிரிவில் முதுநிலை கட்டளை நிறைவேற்றுநராக பணிபுரிந்து வருகிறேன். இன்று மாண்புமிகு நீதிபதி அவர்கள் உத்தரவின் பேரில் முன்னிலையாகி சாட்சியம் அளிக்கின்றேன். 3 வது கூடுதல் மாவட்ட நீதிமன்ற நிறைவேற்றுகை மனு எண்.38/2025 in OS.No.343/2023 வழக்கில் வழக்கு சொத்தை தீர்ப்பாணை பெற்றவர் வசம் ஒப்படைக்க உத்தரவிட்டு டெலிவரி வாரண்டு என்னால் பெறப்பட்டது. இந்நீதிமன்றத்தின் டெலிவரி வாரண்டை பெற்ற நான் 18.04.2026 அன்று நிறைவேற்றுகை மனுவின் உத்தரவினை நிறைவேற்ற தீர்ப்பாணை பெற்ற நாராயணனோடு தாவா சொத்தில் பிரவேசித்த போது அங்கு சாந்தினி என்னும் ஒரு பெண் இருந்தார். நான் கோர்ட்டில் இருந்து வருகின்றேன், டெலிவரி வாரன்ட் இருக்கின்றது. காலி செய்து கொடுங்கள் என்று கேட்டேன். அதற்கு அவர் காலி செய்ய முடியாது, இது என் இடம், கோர்ட்டில் இருந்து நோட்டீஸ் வரவில்லை என்று கூறினார். சொத்தின் சுவாதீனத்தை கொடுக்க மறுத்துவிட்டார். வருங்காலத்தில் நிறைவேற்றுகை மனுவை நிறைவேற்ற இயலவில்லை என்று மேற்குறிப்பு செய்து இந்நீதிமன்றத்தில் வாரன்டை சமர்ப்பித்திருக்கின்றேன்.